தமிழ்நாடு அரசு
**மாநில திட்டக் குழு**

# தமிழ்நாடு:
# இந்தியாவின் உற்பத்தித் திறன் மையம்

## வேளாண்மை பலம்

பொருளாதார மேம்பாட்டிற்குத் தமிழ்நாட்டின் வேளாண்மை ரூ.1.9 லட்சம் கோடியைத் தனது பங்களிப்பாக வழங்கியுள்ளது. கேழ்வரகு மற்றும் கரும்பு உற்பத்தியில் தமிழ்நாடு முதல்நிலை வகிக்கிறது. உற்பத்தித்திறன் என்பது பண்ணையிலிருந்து சந்தை வரை, வலுவான கிராமப்புற வருமானத்தைக் குறிக்கிறது.

## சேவை எழுச்சி

தகவல் தொழில்நுட்பம் - தளவாடங்கள் - விருந்தோம்பல் வரை, பரந்தகன்ற அடிப்படையில் நமது சேவைத் துறை 11.3% வளர்ச்சி கண்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரமே, மீள்தன்மை கொண்ட பொருளாதாரம்.

## உள்கட்டமைப்பு மேம்பாடு

சாலைகள், துறைமுகங்கள், தளவாடங்கள், மெட்ரோ விரிவாக்கம் ஆகியவற்றிற்கு மூலதனச் செலவாக ரூ.2.54 லட்சம் கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது தொழிற்துறைக்குச் சக்தியூட்டி மக்களை இணைக்கின்றது. இதன் விளைவான முன்னேற்றத்தை நீங்கள் காணவும் பயன்படுத்தவும் முடியும்.

## சீரான நகர்ப்புற வளர்ச்சி

ஒவ்வொரு மாவட்டமும் ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட தொழிற்துறை வள ஆதாரங்களைக் கொண்டுள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு மட்டும்தான் இதனைச் சாதித்துள்ளது. வளர்ச்சி ஒரு நகரத்திற்குள் கட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக, வாய்ப்புகள் எல்லா பகுதிகளையும் சென்றடைந்துள்ளன.

## அனைத்தையும் உள்ளடக்கிய சமூக முதலீடு

கல்வி, ஆரோக்கியம், நலன் ஆகியவற்றிற்காக, சமூகத் துறை ரூ.1,57,864 கோடியை செலவு செய்துள்ளது. இதனை ஒரு தொண்டாக அல்லாமல், பொருளாதாரக் கட்டமைப்புப் பணியாகக் கருதுகிறது. ஏனெனில், அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியே நிலையான வளர்ச்சி.







## ஏற்றுமதியில் முதலிடம்

US $52.07 பில்லியனை எட்டும் வகையில், நமது வணிகப் பொருட்களின் ஏற்றுமதி ஏறத்தாழ இரட்டிப்பாகி உள்ளது. மின்னணுவியல், ஜவுளி மற்றும் தோல் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இதன் மூலம், உலக அளவில் போட்டியிடும் திறனை நாம் அடைந்துள்ளோம்.

## முதலீடு ஈர்ப்பு

அந்நிய நேரடி முதலீட்டாளர்களின் வருகை, தேசிய அளவில் குறைந்துவிட்ட போதும், தமிழ்நாட்டின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம், அந்நிய நேரடி முதலீடு US $681 மில்லியனாக உயர்ந்துள்ளது.

## சுகாதாரத்தில் முதன்மை

தமிழ்நாடு சுகாதாரத் தரக்குறியீடுகளில் மிகச்சிறப்பாகத் திகழ்கிறது. இந்தியாவிலேயே மிகக்குறைந்த எண்ணிக்கையாக, தமிழ்நாட்டில் சிசு இறப்பு விகிதம் 1000-க்கு 12. ஆயுள் நீட்சி தேசிய அளவில் இங்கு அதிகம். ஆரோக்கியமான குடிமக்களே, சமூக முன்னேற்றத்தின் உண்மையான அளவீடு.

## மீள்தன்மை கொண்ட பொருளாதாரம்

உலக அளவில் இறக்குமதி கட்டணம் மற்றும் நிச்சயமற்ற தன்மை இருந்தாலும், தமிழ்நாடு வலுவான வளர்ச்சி வேகத்தைக் கொண்டுள்ளது. நிச்சயமற்ற காலத்திலும் நிலைத்தன்மை என்பது திடமான கட்டமைப்பு வலிமையையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

## டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் பாதையில்...

வலுவான உற்பத்தித்திறன், மனித மூலதனம் ஆகியவற்றுடன் தெளிவான பாதையில், 1 டிரில்லியன் பொருளாதார வளர்ச்சியை எட்டும் இலக்கினை தமிழ்நாடு நிர்ணயித்துள்ளது. அதீத பலத்துடன் வளர்ச்சி. நம்பிக்கையுடன் எதிர்காலத்தின் எழுச்சி.



**வெல்வோம் ஒன்றாக!**

**தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!**

செ.ம.தொ.இ / 191 / வரைகலை / 2026

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131